பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 22 வியாழக்கிழமை (07.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 282

# ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க முடியாத நிலைக்கு புலிகளை அரசு தள்ளியுள்ளது

## தமிழர்களை சீண்டுகிறார் ஜனாதிபதி என்று தமிழ்ச்செல்வன் சீற்றம்



கிளிநொச்சி, செப்டெம்பர் 7

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் கடைப் பிடிக்க முடியாத நிலைமைக்குப் புலிகளை இலங்கை அரசு தள்ளிவிட்டிருக்கின்றது என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம் சுமத்தி உள்ளார். தமிழர்களின் பலத்தையும், உணர்வையும் சீண்டிப் பார்க்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று சீற்றத்துடன் தெரிவித்திருக்கும் அவர், அதன் விளைவை ஜனாதிபதி சந்திப்பார் என்றும் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸன் பிரட்ஸ்கர் தலைமையிலான நோர்வே அனுசரணைக் குழுவினரைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

தூதுவர் பிரட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை விசேட ஹெலிகொப்ரர் மூலம் கொழும்பிலிருந்து வவுனியா வரை சென்று, அங்கிருந்து தரை வழியாக வாகனத்தில் கிளிநொச்சியை அடைந்தனர்.

தூதுவருடனான சந்திப்பின் பின்னர் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டை அதிரவைத்த ஷெல், பல்குழல் சத்தங்கள்

யாழ்ப்பாணம், செப்.7

பலாலியிலிருந்தும் யாழ். கரையோரப் பகுதிகளில் இருந்தும் நேற்றுக் காலை முதல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல், பல்குழல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதலால் ஏற்பட்ட அதிர்வினை தீவுப்பகுதி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைகள் திருப்தியில்லையென பிரான்ஸ் தொண்டு நிறுவனம் அதிருப்தி!

கொழும்பு, செப். 7

தனது பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகள் திருப்திகரமாக இல்லை என்று பிரெஞ்சு தொண்டு நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனம் தெரிவித்துள்ளது.

மூதூரில் பணியாளர்களின் படுகொலைகள் நடந்து ஒருமாதகாலம் ஆகியும்கூட

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நிறைவேறியது

கொழும்பு,செப்.7

அவசரகால்ச் சட்டம் நீடிப்பதற்கான பிரேரணை 99 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்குகள் அளிக்கப்பட்டன. 9 வாக்குகள் மட்டுமே எதிராகச் செலுத்தப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மேலக மக்கள் முன்னணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன. (ஐ-12)

## அதிரடிப் படையினர் - புலிகள் அம்பாறையில் கடுஞ்சண்டை!

கொழும்பு,செப்.7

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் அதிரடிப்படை முகாமில் இருந்து அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிப் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதிரடிப்படையினரின் இந்த நகர்வு முயற்சியைத் தாங்கள் முறியடித்துவிட்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருடன் கருணா குழுவினரும் இணைந்து இந்தப் படை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என சில செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை 5.20 மணியளவில் ஆரம்பமாகிய படைகளின் வலிந்த தாக்குதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்தனர் எனவும் இத் தாக்குதல் சுமார் ஆறு மணித்தியாலங்கள் வரை நீடித்ததாகவும் விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

இதன் போது 18 படையினர் பலியானதுடன் 25 பேர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் -

புலிகள் உடும்பன்குளம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வீரமணி தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கிழக்கில் கடும் சமர்

திருகோணமலை, செப்.7

மூதூர் கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை முதல் கடும் சமர் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

வெருகல், கட்டைப்பறிச்சான், செல்வா நகர் ஆகிய மூன்று முனைகளில் மோதல்கள் இடம்பெறுகின்றன என்றும் -

இத்தாக்குதலில் பல பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் - செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானக் குண்டு வீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1-151)

## இலங்கை விவகாரத்தில் இந்தியத் தூதர் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கிறார்

### அனுரா ஆவேசம்; டில்லியின் அறிவுரை அவசியமில்லை என்கிறார்!

இலங்கைப் பிரச்சினை விவகாரத்திலும், எமது நாட்டின் பிரச்சினைகளிலும் இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் தேவையில்லாமல் அதிகளவு மூக்கை நுழைப்பதை நிறுத்த வேண்டும். எமது பிரச்சினையை இப்படித்தான் கையாளவேண்டும் என அவர் எமக்கு அறிவுரை வழங்குவதை எம்மால் ஏற்க முடியாது. எமது பிரச்சினையைத் தீர்க்க எமக்குத் தெரியும்.

- இவ்வாறு ஆவேசமாகக் கூறியிருக்கிறார் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக்கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பாவிப் பொதுமக்களையும், அரசியல் தலைவர்களையும் தொடர்ந்து கொலைசெய்துகொண்டே வந்தனர். அரசு தொடர்ந்தும் பொறுமை காத்துக்கொண்டே இருந்தது. இறுதியில் புலிகளின் அந்தப் பயங்கரவாத நடவடிக்கையை முறியடிக்கும் முகமாக அரசு மேற்கொண்ட தாக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மன்மோகன் சிங் நாளை சந்திப்பார்?

கொழும்பு,செப்.7

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை பெரும்பாலும் நாளை வெள்ளிக்கிழமை சந்திக்கக்கூடும்.

- இவ்வாறு இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

இது தொடர்பாக இந்தியாவில் தங்கியிருக்கும் மாவை. சோ.சேனாதிராஜா கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் கூறியிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இந்தியாவில்தான் உள்ளனர். விரைவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

### படுகொலைகள், ஆள்கடத்தல்கள் பற்றி விசாரிப்பதற்கு

## சர்வதேச விசாரணைக் குழுவை அனுமதிக்கும் அரசின் முடிவுக்கு ஐ.நா. அதிகாரி வரவேற்பு

கொழும்பு, செப்.7

இலங்கையில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், ஆள்கள் காணாமற்போன சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக்குழுவை அழைப்பது என்ற இலங்கை அரசாங்கத்தின் முடிவை ஐ.நா. வரவேற்றிருக்கிறது.

சட்டவிரோத கொலைகள் தொடர்பான ஐ.நா.வின் அறிக்கையாளர் பிலிப் அல்ரன்ஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இலங்கை அரசின் இந்த முடிவை வரவேற்றுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் உத்திசார் இலக்காக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் மனித உரிமை முறைகேடுகளைத் தடுக்கவும், கண்காணிக்கவும் சர்வதேச அமைப்பு ஒன்று அவசியமானதும், அவசரமானதுமாக உள்ளது.

தங்களது நியாயப்பூர்வமான காரணங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### படுகொலைகள்

## திருநெல்வேலியில்...

யாழ்ப்பாணம்,செப்.7

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுக் காலை8.30 மணியளவில் இடம்பெற்ற வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் மரணமாகினர். பெண் ஒருவர் படுகாயங்களுக்கு இலக்கானார்.

ஆடியபாதம் வீதிச் சந்தியில் வீடியோக் கடை நடத்தும் சிவராசா சிவசேகர் (வயது 28) என்பவர் முதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமது கடையில் இருந்த சமயம் இனந்தெரியாத இருவர் வந்து சுட்டுவிட்டுச் சென்றனர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகள் மீதான தடைக்கு அமெரிக்க அரசே காரணம்

## முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸ் கருத்து



சென்னை,செப்.7

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை இந்தியாவில் தொடர்வதற்கு அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் வற்புறுத்தலே காரணம் எனத் தெரிவித்துள்ள இந்திய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், இந்தியப் பிரதமராக வாஜ்பாய் பதவி வகித்த காலத்தில் இலங்கை அரசால் கோரப்பட்ட இராணுவ உதவி எதனையும் அன்றைய வாஜ்பாய் அரசால் வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஆழம் தெரிந்தவர் என்றும் -**

**வாஜ்பாய் ஆட்சிக் காலத்தின்போது பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்தவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தமிழக நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியொன்றிலே மேற்கண்ட தனது கருத்துகளையும், தகவல்களையும் பகிர்ந்துள்ளார்.**

அந்த செவ்வியின் முழு வடிவமும் வருமாறு:-

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தின்போது இலங்கை அரசால் போர்த் தளபாடங்கள் மற்றும் இராணுவ உதவிகள் என்பன எம்மிடமிருந்து கோரப்பட்டன. இவ் விடயத்தில் கடுமையான நெருக்கடி கொடுக்கப்பட்டபோதும் எந்தவொரு இராணுவ உதவிகளையும் வழங்க நாம் முன்வரவில்லை.

மேலும், இலங்கைப் பிரச்சினை விடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடாவிடினும் அங்கு நடைபெறும் அனைத்து விடயங்கள் - சம்பவங்களை டில்லி வெளியுறவுத்துறை மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இதுவரை காலமும், இலங்கை அரசின் சிங்களப் பிரதிநிதிகளை மட்டுமே இந்தியத் தரப்பு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் சந்தித்து வந்தனர். எனினும், முதன் முறையாக இலங்கைத் தமிழ் எம்.பிக்களைச் சந்திக்க இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஒப்புக்கொண்டுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கை விடயத்தில்

(07 ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதித் தேர்த் திருவிழாவில் வழமை போல் பக்தர் கூட்டம்

தொண்டைமானாறு, செப்.7

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு முருகன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று மிகவும் சிறப்பாகவும், கடந்த வருடங்களைப் போல மிகப் பொலிவுடன் நடைபெற்றது.

ஆயிரக் கணக்கான முருக பக்தர்கள் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் தேர்த் திருவிழாவைக் காணத் திரண்டிருந்தனர்.

ஊரடங்கு பகல் வேளையில் தளர்த்தப்பட்டதால் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேர் இழுக்கப்படும் நேரத்துக்கு முன்னதாகவே ஆலயச் சூழலில் திரண்டு விட்டனர்.

வழமை போலவே, தூர இடங்களில் இருந்து பல பக்தர்கள் காவடிகள், பறவைக் காவடிகள் எடுத்து வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். நவக்கிரிப் பகுதியில் இருந்து நாற்பது பக்தர்கள் ஒரே கூட்டமாக பாற்காவடிகளுடன் ஆலயத்துக்கு வந்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கோயிலின் பின் வீதியில் ஆற்றங்கரையோரமாக இராணுவ முகாம் அமைந்துள்ள போதிலும், தேர்த் திருவிழா எவ்வித அசம்பாவிதமும் இன்றி நடைபெற்றது.

கடந்த வருடங்களில் தேர்த் திருவிழாவுக்கு தூரப் பிரதேசங்களில் இருந்து வருவோர் அன்றைய தினம் இரவு ஆலயச் சூழல் உள்ள மடங்களில் தங்கி நின்று தீர்த்தத் திருவிழாவிலும் கலந்துகொண்டே வீடு திரும்புவது உண்டு. ஆனால் இம்முறை அவ்வாறு தங்கிநிற்க முடியவில்லை.

தீர்த்தத் திருவிழா இன்று காலை சுமார் 8.30 மணியளவில் ஆரம்பமாகும். (அ)

## எரிபொருள் அனுமதிப் பத்திரம் பெற பிரதேச செயலகங்களில் மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.7

எரிபொருள் அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு மக்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக குறிப்பிட்ட எரிபொருள் பெறுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்க சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள போதிலும் பிரதேச செயலகங்களுக்கு இடையில் வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக பொதுமக்கள் முறைப்பட்டுக்கொள்கின்றார்கள்.

சில பிரதேச செயலகங்களில் குறிப்பிட்ட படிவங்கள் பெறுவதற்கு நீண்ட வரிசையில் மக்கள் காணப்படுகின்ற போதிலும், சில பிரதேச செயலகங்களில் இத்தகைய நிலைமை காணப்படவில்லையென்றும் கூறப்பட்டது.

எரிபொருள் அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்காக சில பிரதேச செயலகங்களில் இரண்டு, மூன்று நாள்கள் கூட செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(68)

## மலையக அரசியலில் அழுத்தங்களைப் பிரயோகிக்க புலிகளுக்கு உரிமை இல்லை என்கிறார் தொண்டமான்

கொழும்பு, செப்.7

'நாங்கள் மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். எனவே, எமது மக்களுக்கு நன்மையானவை குறித்து நாம் சுயாதீனமாகத் தீர்மானங்களை மேற்கொள்கிறோம். எனவே, எமது அரசியல் நடவடிக்கைகளில் அழுத்தங்களை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளுக்கு உரிமையில்லை.'

- இவ்வாறு தெரிவிக்கிறார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான்.

அரச கட்டுப்பாட்டில் இயங்கும் 'தினமின' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே மேற்படி கருத்துகளை அவர் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அமைதி முயற்சிகளுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பினை அரசுக்கும், ஜனாதிபதிக்கும் வழங்குவதற்காகவே நாம் அரசுடன் இணைந்தோம். அதேபோல் மலையக மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை செய்து கொள்வதும் நாம் அரசுடன் இணைவதற்கு ஏதுவாயிற்று. இன்னுமொரு விடயத்தை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நாம் அரசுடன் இணைய எடுத்த தீர்மானம் அவசரமாக எடுத்த ஒரு முடிவல்ல. கடந்த பெப்ரவரி முதல் அரசுடன் நடத்திய கருத்துப் பரிமாற்றங்களின் பிரதிபலனாகவே இது ஏற்பட்டது. எனவே, இது அவசரமாக எடுத்த முடிவல்ல. அவசரமான மாற்றமும் அல்ல.

நாம் பொறுப்புடன் அரசியலில் ஈடுபடுகிறோம். தனிப்பட்ட காரணங்களால் நாம் எந்த முடிவையும் எடுப்பதில்லை. மக்களின் நலன்களை முன்வைத்தே நாம் எப்போதும் செயற்படுகின்றோம். அரசு யுத்தத்தை நோக்கி செல்வதாகக் கூறுவது தவறு: அப்படி ஒரு நிலைமை இருக்குமாயின் இதர கட்சிகள் அதனை நிறுத்தும் வகையிலான நீதியான தீர்வொன்றுக்காக அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

நாங்கள் மலையகத் தமிழ்மக்களை பிரதிநித்துவப்படுத்துகிறோம். எனவே, எமது மக்களுக்கு நன்மையானவை குறித்து நாம் சுயமாகத் தீர்மானங்களை மேற்கொள்கிறோம். எனவே, எமது அரசியல் நடவடிக்கைகளில் அழுத்தங்களை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளுக்கு உரிமை யில்லை.

- இவ்வாறு கூறியிருக்கிறார் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்.

(ஐ)

## யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கிழித்தெறியுங்கள்! சபையில் நேற்றும் விமல் வீரவன்ஸ கோஷம்

கொழும்பு, செப்.7

யுத்தநிறுத்த ஒப்பந்தம் இலங்கை அரசமைப்புக்கு முரணானதென்றால் அரசு அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவேண்டும். அமைச்சர் நிமால் சிறிபால டீசில்வா யுத்தநிறுத்த ஒப்பந்தம் அரசமைப்பிற்கு முரணானது எனத் தெரிவித்துள்ளார்.

அப்படியானால் அரசு ஏன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு கட்டுப்படவேண்டும் என ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று சபையில் பேசும்போது கேள்வியெழுப்பினார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணைமீது அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

புலிகளைத் தோற்கடிக்கும் உத்தி நமது பாதுகாப்புப் படையினருக்கு இருக்கிறது என்பது சம்பூரைக் கைப்பற்றியதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு படையினருக்கு முறையாக வழிகாட்டவேண்டும்.

புலிகள் 'கொங்கிரீட்' பதுங்கு குழிகளை அமைத்தபின்னர் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை சேகரித்து வைத்திருந்த நிலையில் படையினர் சம்பூரைக் கைப்பற்றியுள்ளனர். இதுதான் யதார்த்தம்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் விவாதங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வழமையாகப் பேசும்போது அரசை எச்சரிக்கும் தொனியிலேயே பேசுவர். எம் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் என்று இச்சபையில் பேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று சபையில் இல்லை.

இருக்கும் சிலரும் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள தமிழ்மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்குத் தேவையான வசதிகளையும் உணவுப் பொருள்களையும் அரசு வழங்கவேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேற மக்கள் ஆவலாகவுள்ளனர். முகமாலையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் விரைவில் தடைகளை உடைத்துக்கொண்டு வருவர் என்பது உறுதி.

அரச படையினர் புலிகளை வெற்றி கொண்டு முன்னேறும் போது ஏதாவது ஒரு வெளிநாட்டு சக்தி அதை இடைநிறுத்தும் வகையில் செயற்படுவது வழக்கம். இப்போதும் இதுபோன்ற முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்.

(ஐ)



நேற்று கிளிநொச்சிக்கு வந்த நோர்வேத் தூதுவர் தலைமையிலான குழுவினர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்து பேச்சு நடத்திய போது எடுக்கப்பட்ட படம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேம்பிராயில் சூடு குடும்பஸ்தர் காயம்!

யாழ்ப்பாணம், செப்.7

மீசாலை வடக்கு வேம்பிராய் சந்தியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். பேரம்பலம் (வயது - 55) என்பவரே காயமடைந்தவராவார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இவரைச் சுட்டுவிட்டு தப்பினர் எனக் கூறப்பட்டது.

(1-15-78-68)

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## சந்திரிகா வழியில் மஹிந்தரும்....?

விடுதலைப் புலிகளிடமிருந்து சம்பூரைக் கைப்பற்றியதாக அரசுத் தரப்பு அறிவித்ததை அடுத்து தென்னிலங்கையில் ஆரவாரம் எழுந்திருக்கின்றது. பேரினவாதிகளின் கருத்தில் கூறுவதானால் தெற்கில் எழுச்சி ஒன்று பிறந்திருக்கின்றது.

சம்பூரிலிருந்து புலிகளை விரட்டியமை போன்று முழுக் கிழக்குப் பிரதேசங்களிலும் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டியடித்த பின்னரே அரசு ஓயவேண்டும் என்று பிரசங்கம் - உபதேசம் - செய்திருக்கின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ.

ஆனால், சம்பூருக்கு அப்பால் வலிந்து தாக்குதல் நடத்தும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை என்கிறார் அரசின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலம் தொடக்கமே தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் விருப்பத்துக்கு ஏற்பவும் அவர் களைத் திருப்திப்படுத்தும் வகையிலும் காய்களை நகர்த்தி வருபவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

எனவே, சம்பூர் நிலைமையைத் தொடர்ந்து அவரது அரசின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் எப்படி அமையும் என்பதை ஊகிப்பது தமிழர் தரப்புக்கு அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

விடுதலைப் புலிகளின் கடந்த இருபத்தியைந்து வருட கால யுத்தப் போக்கை நோக்குபவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரியும்; தெரியும்.

அது - இந்தக் கால கட்டத்தில் களத்திலும், சமரிலும், போராட்டத்திலும் விடுதலைப் புலிகள் பின்னடைவுகளை மட்டுமல்ல, பெரு வீழ்ச்சிகளையும் கண்டிருக்கின்றார்கள். ஆனால், அந்த வீழ்ச்சிகளில் இருந்து புலிகள் துவண்டுவிடவில்லை. இடிந்து, அழிந்துபோய் விடவில்லை. மாறாக அத்தகைய வீழ்ச்சிகளின் பின்னரே பேரெழுச்சியாகப் புலிகள் புத்துயிர்ப்புப் பெற்று வந்த்துதான் சரித்திரம்.

இந்தியப்படைக் காலத்திலும் சரி, யாழ். குடாநாட்டைக் கைவிட்டு வன்னிப் பெரு நிலப்பரப்புக்குத் தங்கள் தளங் களை நகர்த்தும் கட்டாயத்துக்கு உள்ளானபோதும் சரி, புலிகள் எதிர்கொண்ட வீழ்ச்சி, பின்னர் பேரெழுச்சிக்குப்படிக் கட்டாகியமைதான் வரலாறு.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டாடும் எதிர்த் தரப்பினர், அதிலிருந்து மீண்டெழும் புலிகளின் வலிமை பற்றி எப்போதும் சிந்திப்பதில்லை. கடந்த காலத்தில் அவர்கள் விட்ட தவறு அதுதான்.

ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதல் சந்திரிகா குமாரதுங்கவரை ஆட்சியாளர்கள் அதில்தான் தவறிழைத்திருக்கின்றார்கள்.

இப்போதும் சம்பூரைப் புலிகள் கைவிட்டு வெளியேறியமை புலிகளின் வீழ்ச்சியல்ல. ஒரு பின்னடைவு. புலிகளைப் பொறுத்தவரை அது வெறும் தந்திரோபாயப் பின் வாங்கல் மட்டுமே.

*"முழு அளவிலான யுத்தம் வெடித்தால்தான் வலுச் சமநிலையைப் பரிசோதிக்க முடியும். யுத்த நிறுத்த கால சண்டைகளில் அதை எதிர்பார்க்கக் கூடாது."* - என்று புலிகளின் அரசியல் ஆய்வுமையப் பொறுப்பாளர் கவியழ கன் தெரிவித்த கருத்தின் பின்னணியி லேயே சம்பூர் நிலை மையை நோக்க வேண்டும்.

ஆனால், சம்பூர் கள நிலைமை மூலம் ஏதோ வெட்டி வீழ்த்தி விட்டமை போலவும், சாதித்து விட்டமை மாதிரியும் தென்னிலங்கை துள்ளிக் குதிக்கின்றது.

பூநகரியிலிருந்து சுமார் 27 முதல் 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பலாலிப் படைத்தளம் மீது பீரங்கி மற்றும் ஷெல்களை புலிகள் ஏவ முடியுமானால் -

திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து கொட்டியாரக் குடாவினால் பிரிக்கப்பட்டு சுமார் பத்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள சம்பூரிலிருந்து மேலும் இரண்டு, மூன்று கிலோமீற்றர் தொலைவுக்குப் புலிகளைப் பின்தள்ளியிருப்பதன் மூலம் என்னதான் சாதிக்கப்பட்டாகிவிட்டது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

சம்பூரை அண்டிய பவுல் முனையிலிருந்து புலிகள் அப்புறப் படுத்தப்பட்டதன் மூலம் திருகோணமலைத்துறை முகத்தின் முகத்துவாரத்தை நோக்கும் பார்வை வியூகத்தைப் புலிகள் இழந்திருப்பார்கள் என்பது மட்டுமே கவனிக்கத்தக்கது.

சரி. சம்பூருக்கு அடுத்தது என்ன என்ற கேள்வி இப்போது எழுகின்றது.

1994 நவம்பரில் யுத்த நிறுத்தச் சூழலோடு ஆட்சிக்கு வந்தார் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதேபோல 2005 நவம்பரில், அதே போன்ற யுத்த நிறுத்தச் சூழலோடு ஆட்சிக்கு வந்திருக்கிறார் தற்போதைய ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ.

சந்திரிகா ஆட்சிக்கு வந்து சொற்ப காலத்தில் அவருக் கும், புலிகளுக்கும் இடையிலான முரண்பாடு முற்றி, யுத்தம் வெடித்து, யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா - அவரது மாமனார் ஜெனரல் அனுருத்த கூட்டணி, முன்னெடுத்தது.

அதேபோல, இப்போது ஜனாதிபதி மஹிந்தருடன் புலிகளின் உறவு நிலை முரண்பட, சம்பூரைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - அவரது சகோதரர் கேணல் கோட்டபாய ராஜபக்ஷ கூட்டணி முன் னெடுத்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் அதனை அறி விக்கும் வெற்றிப் பட்டோலையைத் தங்கத் தாம்பாளத்தில் -வைத்து ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஜெனரல் ரத்வத்தை கையளிக்கும் நிகழ்வு பெரும் ஆரவார, ஆடம்பரங்களோடு கொழும்பில் நடத்தப்பட்டது. ஒரு மன்னரின் தளபதி அடுத்த (அயல்) நாட்டைக் கைப்பற்றி வந்து, அந்த வெற்றிப் பட்டோலையைத் தனது மன்னரிடம் ஒப்படைப்பது போல அந்நிகழ்வு அப்போது அரங்கேறியது.

அது போலவே, சம்பூரை அரசுப் படைகள் கைப்பற்றின எனக் கூறப்படும் தகவல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 55 ஆவது மாநாட்டில் வைத்து அதே ஆரவாரத்தோடு நாட்டின் தலைவரால் அறிவிக்கப்பட்டு அமர்க்களப்படுத்தப்பட்டது.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய மமதையில் தொடர்ந் தும் இராணுவ வெறித் தீவிரப் போக்கில் ஜனாதிபதி சந்திரிகா நடந்து கொண்டு, முழு இலங்கைத் தீவையுமே குட்டிச் சுவராக்கியமை அதன் பின்னான சரித்திரம். இந்த நாட்டின் துன்பியல் பட்டறிவு அது.

பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் பிடியில் சிக்குண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்தரும் சம்பூர் நிலைமையை அடுத்து, ஜனாதி பதி சந்திரிகா சென்ற அதே இராணுவ வெறிப்போக்குத் திசையில் செல்வாரா என்பதே இப் போதைய கேள்வி.

சம்பூர் வெற்றியை அறிவிக்கும் தமது பிரகடனத்தில் "பயங்கரவாதிகளுடன் அவர்களுக்குரிய மொழியிலேயே பேசுவோம்" என்று அவர் தெரிவித்தமையும் -

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற பௌத்த - சிங்கள மேலாண்மைவாத சக்திகளே அவரைச் சூழ்ந்து நிற்பதையும் -

நோக்கும்போது ஜனாதிபதி பதவிகளில் இருக்கும் தலைவர்கள் மாறினாலும் அவர்களின் அதிகாரப் போக்கில் மாற்றம் இருக்காது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

# ஏ-9 திறந்து இராணுவ நெருக்கடி நீங்கும் வரை கல்விச் செயற்பாட்டை புறக்கணிக்க அழைப்பு

## யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.7

ஏ-9 வீதி திறக்கப்பட்டு, இராணுவ நெருக்கடி நீங்கும் வரைக்கும் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்குமாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

குடாநாட்டில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் வகையிலும், கல்விச் சாலைகளில் அர்த்தமற்ற ரீதியில் செயற்பாடுகள் தொடர்வதை நிறுத்தும் வகையிலும் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஒட்டுமொத்த கல்விசார் சமூகத்தினரும் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்றும் - தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக, தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் இராணுவக் கெடுபிடிகளால் தமிழ் பேசும் மக்களின் நாளாந்த வாழ்வென்பது மிகுந்த அசௌகரியங்களோடும் அடுத்த கட்டம் என்னவென்று தெரியாத அவலத்தோடும் நகருகின்றது.

நாளும், பொழுதும் மக்களும் மாணவர்களும் படுகொலை செய்யப்படுகின்றனர் - கடத்தப்படுகின்றனர் - காணாமற் போகின்றனர். அண்மையில் படைத் தரப்பினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இயல்புநிலை குழுப்பங்கள் ஒட்டுமொத்த மக்களினதும் அத்தியாவசிய தேவைகளையும் பாதிக்கவைத்திருப்பதோடு, பாரிய மனிதாபிமான பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில், தமிழ் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் மாணவர்களின் கல்வியென்பது பரிதாபப்படவேண்டிய நிலையில் மாணவர்களின் எதிர்காலத்தின்முன் கேள்விக்குறியாகி நிற்கின்றது. குடாநாட்டில் கடந்த மாதம் 11ஆம் திகதி படைத்தரப்பால் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்குசட்டம் இன்றுவரை முழுமையாக தளர்த்தப்படாது தொடர்கின்றது. கடந்த காலங்களில் இராணுவத் தரப்பு தமது பாதுகாப்பு எனக் கூறி பாடசாலைகளையும், பள்ளிச் சூழல்களையும் ஆக்கிரமித்தும், பள்ளிமாணவர்களின் கல்வியினைத் திட்டமிட்டு குழிதோண்டியுப் புதைத்தது.

அரச அதிபர் உள்ளிட்ட குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களினதும் பணிப்பாளர்களையும் அழைத்த இராணுவத்தரப்பு குடாநாட்டில் கல்விச் சாலைகளை திறக்கும்படியும், கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி கூறியுள்ளது. ஆனால், அதற்கான சூழலினை ஏற்படுத்த படைத் தரப்பு மறந்துவிட்டது. மட்டுமன்றி மறுத்தும் வருகிறது. மாணவர்கள் கல்விகற்கின்ற சூழலிலோ, கல்வியினைத் தொடர்கின்ற மனநிலையிலோ, கல்வியைத் தொடரக்கூடிய வீட்டுநிலமையிலோ இல்லை.

ஊரடங்கு நடைமுறைகளால் மாணவர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளுக்கு செல்லமுடியாதுள்ளனர். அன்றாடம் தொழில் புரிந்து வாழ்வை ஓட்டுகின்ற குடும்பங்களும் கடற்றொழிலை நம்பி வாழ்கின்ற குடும்பங்களும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு மத்தியில் பிள்ளைகளை அனுப்பி கற்கவைப்பதென்பது முடியாத காரியமாகும்.

### இடை வழியில் ஏற்படக் கூடிய அபாயங்கள்

படையினர் பாடசாலைகளுக்கு அண்மையில் பல்குழல், பீரங்கி போன்ற கனரக ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர். ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளையிலும் மாணவர்களால் போக்குவரத்து மேற்கொள்வதில் உள்ள சிக்கல்களும் இடைவழியில் ஏற்படக் கூடிய அபாயங்களும் மாவணவர்களை கற்கைச் சூழலில் இருந்து பின்தள்ளுகின்றன. பாடசாலைகள் நடத்தப்படுகின்ற வேளைகளில் பாடசாலைச் சூழலில் சுற்றிவளைப்பு மற்றும் கைது போன்றவற்றை மேற்கொள்ளும் படைத்தரப்பு திடீரென ஊரடங்கு அறிவித்தலையும் விடுகின்றது.

பெருமளவு மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளுக்கும், துணைப் பாட விதான செயற்பாடுகளுக்காகவும் தென்னிலங்கை சென்ற நிலையில் ஏ-9 பாதையை இராணுவம் திடீரென மூடியுத்தத்தை ஆரம்பித்தபடியால் குடாநாட்டிற்கு வரமுடியாமல் உள்ளது. கல்விபெறும் நோக்கோடு குடாநாட்டுக்கு வருகைதந்து தற்காலிக இருப்பிடங்களில் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர மாணவர்கள் சொந்த இடங்களுக்கு செல்லமுடியாது அநாதரவான நிலையில் அந்தரிக்கின்றனர்.

தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் அரசுக்கும், அதன் இராணுவத்திற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும். எம்மீது பிரையோகிக்கப்பட்டு வரும் அரச பயங்கரவாதமும், அராஜக பாரா பட்சமுமே எம்மை வெகுவாக பாதித்துள்ளன. எமது உரிமைக்காக எமது விடுதலைக்காக உண்ணாது உறங்காது போராடிக் கொண்டிருப்பவர்களை பயங்கரவாதிகள் என சிங்களத் தலைவர்களோ, எந்த சிங்களவர்களோ எவரும் பிதற்றவும் மாணவர்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

முழுமையாக ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஏ-9 வீதி படைத்தரப்பால் திறக்கப்பட்டு குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் நீங்கினால்தான் நாம் கல்வியை தொடருகின்ற அடிப்படையான சூழல் உருவாகும் என்பதை ஒட்டுமொத்த மாணவர் குரலாக தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவர்கள் வீடுகளில் இருந்து கல்வியை சிதைக்க வேண்டுமென எண்ணியிருக்கும் எதிரியின் எண்ணங்கள் நிறைவேறாத வகையில் கற்று உரிமையுன் கூடிய தேசத்தை கட்டி எழுப்ப உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- என்று அதில் உள்ளது.



யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் கூடிய மக்கள் மத்தியில் யாழ். அரச அதிபர் உரை நிகழ்த்துவதையும், அங்கு கூடியோரையும் படங்களில் காணலாம்.

# தென்னிலங்கை செல்லமுடியாதுள்ள மக்கள் செயலகம் முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம்

## அரச அதிபரிடம் மகஜர் கையளித்தனர்

யாழ்ப்பாணம்,செப்.7

தென்னிலங்கைக்கு செல்ல விமானம் மற்றும் கப்பல் பயணத்திற்கு பதிவு செய்தவர்கள் யாழ். செயலகத்தின் முன்னால் நேற்று முற்பகல் 10 மணியளவில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 11ஆம் திகதியின் பின்னர் யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் வர்த்தகம், தொழில், திருமணம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் எனப் பல விடயங்களுக்கும் செல்ல வேண்டிய பலர் யாழ். குடாநாட்டில் தவித்துக்குக் கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறு இக்கட்டுக்குள்ளாகியுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றுக்காலை யாழ். செயலகத்தின் முன்னால் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் தம்மை விரைவாக தென் பகுதிக்கு அனுப்ப நடவடிக்கையெடுக்க வேண்டும் எனக்கோரி கையொப்பங்கள் இட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் யாழ். அரசாங்க அதிபரிடம் கையளித்தார்கள்.

அரச அதிபர் தன்னால் இயன்ற வகையில் முன்முயற்சி மேற்கொண்டுவருவதாகவும் அவைகள் வெற்றிபெற்று வரும் சந்தர்ப்பத்தில் உரியவர்கள் செல்வதற்கான வசதிகள் செய்யப்படும் என்றார். போக்குவரத்து சம்பந்தமான விடயம் தன்னால் மட்டும் முடிவெடுக்கப்படுவதன்று எனத் தெரிவித்த அரசாங்க அதிபர், அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொள்ளும் முடிவைப் பொறுத்தே அது அமையும் எனவும் தெரிவித்தார்.

(ப-68-190)

### உணவகம் நடத்தும் உரிமையாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உணவகம் நடத்தும் யாழ். வணிகர் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தமது உணவகங்களுக்குத் தேவையான அரிசி, மா, சீனி போன்றவற்றின் விவரங்களை நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் வணிகர்கழகப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு வணிகர் கழகத்தினர் கேட்டுள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### YAARL TECH SYS

- YAARL TECH SYSஇன் அனைத்து கணனி வகுப்புகளும் நடைபெறுவதால் ஏற்கனவே கல்வி கற்று பயிற்சியை நிறைவு செய்யாத மாணவர்களும், பயிற்சியை முடித்து இதுவரை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத மாணவர்களும் எதிர்வரும் 12-09-2006 ஆம் திகதிக்கு முன் (செவ்வாய்க்கிழமை) அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- அலுவலகநேரம் தினமும் 8.00 a.m.-1.00 p.m.
- குறித்த திகதிக்குப் பின் பிந்துவோருக்கு நிறுவனமோ நிர்வாகமோ பொறுப்பல்ல.

NO.03, KALADDY JUNCTION,
THIRUNELVELY. (53575) -நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### பொன்னையா நடராசா



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா அவர்கள் 04.09.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி (பிரான்ஸ்), இராசலிங்கம், குணசிங்கம், துரைச்சாமி, சோதிமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், லோகநாதன், நாதன் மற்றும் சிறிகாந்தன், புவனேஸ்வரி, பாலகுமார், சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.09.2006) புதன்கிழமை கனடாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.துரைச்சாமி *(சகோதரன்)*.

(53585)

## சின்னக்கடையில் இறைச்சி விற்பனை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.7

குருநகர் சின்னக்கடையில் உள்ள இறைச்சிக்கடைகளில் திங்கள் முதல் மீண்டும் இறைச்சி விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி ஆரம்பமான யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து இறைச்சி விற்பனை குருநகர் வீதிகள் சிலவற்றிலும் சில தனியார் வீடுகளிலுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இறைச்சிக்கடைகள் வழமையான இடத்தில் விற்பனையை ஆரம்பித்துள்ளபோதிலும் மீன், மரக்கறி விற்பனை குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தையில் மீளவும் ஆரம்பிக்கப்படவில்லை. இச்சந்தையின் முன் னால் அமைந்துள்ள வீதிகளில் இவ் வியாபாரம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(1-51)

## தவறிவிட்டது

*கோப்பாய் வடக்கு, கோப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மராஜா ஆகிய எனது பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிளின் பதிவுப் புத்தகம், காப்புறுதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற கைப்பை ஒன்று 27-08-2006 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.165, வேணிகளஞ்சியம், சத்திரச்சந்தி, K.K.S.Road, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.*

(53552)

## தென்மராட்சியில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் தொழுநோய், காசநோய், புற்றுநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இக் கொடுப்பனவினை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப-117)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு மெயின் ரோட்டில் 4¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 49492341**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 01 - 1959



மறைவு 17 - 09 - 2005

அமரர் **சரவணை தவராசா.**

*(கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை)*

தோற்றம் மறைந்தின்று
ஓராண்டு ஆனதுவோ - ஆனாலும்
ஓயவில்லை உங்கள் நினைவு.

05, கண்ணாபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(53580)

## JAFFNA COLLEGE, VADDUKODDAI

## ADMISSION - 2007

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன.

   **தரம் 1, தரம் 6**

2. அ) விண்ணப்பப் படிவங்களை 08-09-2006 முதல் 14-10-2006 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 14-10-2006இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 18-10-2006. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. **வயதெல்லைகள்:**
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01-02-2001இற்கும் 31-01-2002 இற்கும் இடையில் பிறந்திருந்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01-02-1996இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருந்தல் வேண்டும்.
7. ஒரு படிவத்திற்கும் பரீட்சைக்குமான கட்டணம் ரூபா 500
8. **பிரவேசப் பரீட்சை / நேர்முகப் பரீட்சை:**
   04-11-2006 காலை 9 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாணவர் - மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் கூடிய விடுதி, நூலகப் பாவனை மற்றும் சிறந்த புலமைப்பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

(சி/50961) **- அதிபர்.**

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவி

கல்வியங்காடு,செப்.7

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தற்போதைய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறுபட்ட அத்தியாவசிய உதவிகளை வழங்கிவருகிறது.

காயமடைந்து தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உடுபுடவைகள் மற்றும் பாய், தலையணைகள், குடிநீர் வசதி போன்றவற்றை வழங்கியுள்ளது.

அதேவேளை, தென்மராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து ஏதிலிகளாக உள்ள மக்களுக்குத் தற்காலிக முகாம்கள் அமைக்கப்படும் வேலைகள் இடம்பெற்றுவருவதாகவும் அதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அதன் திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ப-79)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 12 - 1927



மறைவு 29 - 08 - 2004

**அமரர் பொன்னுத்துரை நாராயணலிங்கம்**

**(Rtd P.W.D.OVERSEER)**

திதி: 07.09.2006

அப்பா! எமது ஆத்மாவை அதிரவைத்த உங்கள் பிரிவுத் துயரின் இரண்டு ஆண்டுகள் நிறைவில், என்றும் உங்களின் அன்பு, பாசம், அமைதி, அரவணைப்பின் பசுமையான நினைவுகளுடன் எம் இதய தெய்வத்தின் இரண்டாம் ஆண்டின் நினைவாக பாசத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

(சி/50958)

"ரூப மகால்" தேவாலய வீதி, சங்கானை.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### கோவிந்தராசா சிவவடிவேல்

**(நாதஸ்வர வித்துவான்)**

தோற்றம் 05-07-1946 | மறைவு 23-08-2006

*எமது இல்ல ஒளி விளக்கு சிவப்பேறடைந்த செய்திகேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (07.09.2006) வியாழக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (08.09.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.2/5, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(53583)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 16 - 10 - 1979



அநியாய அழிப்பில் 07 - 09 - 2004

### நவரத்தினராசா பிரேம்குமார் (பிரேம்)

*வாழும் வயதினில் வானுலகம் சென்றாயோ!*
*ஈன இரக்கமின்றி கொடுமையாகத்*
*தாக்கப்பட்டு இன்னுயிர் நீத்தாயோ!*
*தினமும் உன்னை நினைத்து*
*கலங்கியபடி உள்ளோம்.*

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

(53574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்துக்கு புலிகளால் ஆபத்து; அதனால்தான் அரசு சம்பூரை மீட்டது!

## அரச சமாதான செயலகம் விளக்கம்

கொழும்பு,செப்.7

திருகோணமலையில் உள்ள 'பிறீமா' கோதுமை மா ஆலை, 'டோக்கியோ' சீமெந்து நிறுவனம், திருமலை எண்ணெய்க் குதங்கள் ஆகிய பெரும் முதலீடுகளை சம்பூரிலிருந்தபடியே தாக்கியழிக்கக்கூடிய வல்லமை புலிகளிடம் இருந்தது.

எனவே, சம்பூரைக் கைப்பற்றி, அங்குள்ள புலிகளின் நீண்டதூர எறிகணைச் செலுத்திகளை அழித்து, நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இருந்த காரணத்தால்தான் மூதூரைக் கைப்பற்றும் முடிவை அரசு எடுத்தது.

இவ்வாறு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது அரச சமாதானச் செயலகம்.

இதுதொடர்பாக சமாதானச் செயலகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடபகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத ஆதரவை திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை மற்றும் அதற்கு அருகிலுள்ள விமா னப்படைத்தளம் ஆகியவை வழங்குகின்றன.

2006 ஓகஸ்ட் முதலாம் திகதி சம்பூரிலிருந்து பலமுறை பீரங்கி வேட்டுகளைத் தீர்த் ததன் மூலம் கடற்படைத் தளத்திலுள்ள கட்டடங்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் சேதம் விளைவித்ததோடு, திருகோணமலையிலுள்ள கடற்படைத் தளத்தைத் தாக்குவதற்கான பலம் தமக்கிருப்பதையும் தெளிவாக நிரூபித்துக் காட்டினர்.

மேலும், ஓகஸ்ட் 12ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகே சீனன்குடாவிலுள்ள விமானப்படைத் தளத்தை நோக்கியும் பீரங்கிக் குண்டுகளை ஏவினர்.

**விடுதலைப் புலிகளின் திறன்**

சம்பூரிலிருந்து நீண்ட-தொலை செல்லக் கூடிய ஆயுதங்களைப் பிரயோகித்துப் பாதுகாப்புப் படையினருக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் திருகோணமலை துறைமுகப் பகுதியிலுள்ள முக்கிய வழிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய விடுதலைப் புலிகளின் திறன் இத்தாக்குதல்கள் மூலம் தெளி வாகியது.

திருகோணமலையில் உள்ள இராணுவத் தளங்களின் பாதுகாப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிக தூரம் தாக்கக் கூடிய ஆயுதங்கள் சந்தேகத்துக்கிடமின்றி ஒரு அச்சுறுத்தலாகவே உள்ளன என்பதை திருகோணமலை கடற்படைத் தளம் எதிர்நோக்கும் ஆபத்துக்கள் பற்றிய தொரு அறிக்கையில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பசுபிக்சமுத்திரக் கட்டளைப் பீடம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை துறைமுகம் ஸ்ரீலங்காவின் தேசிய பொருளாதாரத்தில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. இலங்கையில் 40 விழுக்காடு எரிபொருள் நிலையங்களை நிர்வகிக்கும் ஸ்ரீலங்கா-இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபன நிறுவனம், திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள சீனன்குடாவில் இருக்கும் எண்ணெய்த் தாங்கிகளில் அதன் களஞ்சியத்தைப் பேணுகிறது.

அங்குள்ள விமானப் படைத்தளத்தை இலக்குப் பார்க்கக்கூடிய விடுதலைப் புலிகளின் திறன், இலங்கை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய வசதியையும் இலக்குப் பார்த்துத் தாக்கி, அதனால் உண்டாகும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தில் பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்த கூடியது.

திருகோணமலையில் அமைந் துள்ள பிறிமா கோதுமை மா ஆலை இலங்கையின் முழுக் கோதுமை மா தேவையை நிறைவு செய்கிறது. சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் தொலைதூரம் தாக்கக்கூடிய ஆயுதங்கள் பிறிமா ஆலையையும் அதன் களஞ்சியங்களையும் இலக்குப் பார்க்கவும் முடியும்.

திருகோணமலைத் துறைமுகம எதிர்நோக்கும் அச்சுறுத்தல் காரணமாக கோதுமையை இறக்கு வதற்காக போக்குவரத்துச் செய்யும் சர்வதேச கப்பல் நிறுவனங்கள் தமது தயக்கத்தையும் தெரிவித்துள்ளன.

அந்த ஆலைக்கு சேதம் ஏதும் விளைந்தால் அது நாட்டின் உணவு விநியோகத்தைப் பாரிய அளவில் பாதிக்கும்.

திருகோணமலைத் துறைமுகத் துக்குப் புறம்பாக, டோக்கியோ சீமெந்து நிறுவனம் போன்ற ஏனைய பல தொழிற்சாலைகளும் அங்கு அமைந்துள்ளன.

எனவே, ஸ்ரீலங்காவின் நன்மை கருதி, சம்பூரில் நிலைகொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தூர இலக்குகளைத் தாக்கக் கூடிய ஆயுதங்களை செயலிழக்கச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

சம்பூரிலிருந்து திருகோணமலை துறைமுகத்துக்கான அச்சுறுத்தலை நீக்குவதற்கு வேறு வழியில்லை என்ற நிலையில், இது தொடர்பாகத் தெளிவானதொரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று சமாதான செயலக இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம்

யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தற்போது இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணங்களை வழங்கி வருகின்றன.

நிவாரணத்தைப் பெறுவதற்காக சங்கக் கிளைகள் முன்பாக மக்கள் நீண்ட வரிசைகளில் குழுமி நிற்பதை அவதானிக்க முடிகிறது. (51)

## மருந்துக் கலவையாளர் பயிற்சி திங்களன்று ஆரம்பம்

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் நடாத்தப்படும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி வகுப்புகள் மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாக உள்ளன.

இப்பயிற்சி நெறி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களை யாழ்.பண்ணையில் அமைந்துள்ள யாழ். பிராந்திய பயிற்சி நிலையத்திற்கு அன்று காலையில் சமுகமளிக்குமாறு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-51)

## அச்செழுவிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு பங்குத்தந்தையின் உதவி

யாழ்ப்பாணம்,செப்.7

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக அச்செழுவிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது அச்செழு நல்லாயன் மெதடிஸ்த தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்குத் தேவாலயப் பங்குத் தந்தை பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறார்.

அச்செழு நல்லாயன் மெதடிஸ்த தேவாலயத்தில் சுமார் 60 குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன. அச்செழுப் பிரதேசத்தில் பரவலாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததனால் அச்சமடைந்த மக்கள் அருகிலுள்ள தேவாலயத்தில் தற்போது தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கு ஆலயப் பங்குத்தந்தை உணவுப் பொருள்கள், குடிதண்ணீர் மற்றும் இதர வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்.

அதேவேளை, இடம்பெயர்ந்த மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபா வீதம் கொடுத்துள்ளார் என்று தெரிகின்றது.

இதனால், அச்செழுவாழ் மக்கள் நல்லாயன் மெதடிஸ்த தேவாலய பங்குத்தந்தைக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இம்மக்கள் மலசல கூடம் பாதுகாப்பற்ற நிலைமை மற்றும் சுயதொழில் இன்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-79)

# திட்டமிட்ட இன அழிப்பைத் தடுத்துநிறுத்த ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## சர்வதேசத்திடம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.7

இறையாண்மையின் பெயரால் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இன அழிப்பினை நிறுத்தி தமிழர் தாயகமெங்கும் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட இலங்கை அரசிற்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு சர்வதேசநாடுகளிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளது யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்.

இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக மக்களின் இயல்பு நிலையானது மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஐந்திற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். நாளும் பொழுதும் பலர் காணாமற் போய்க்கொண்டு இருக்கின்றனர். தொடர்ந்து அடிக்கடி இடம்பெறும் சுற்றிவளைப்புகள் காரணமாகவும் அமுல்படுத்தப்படும் ஊரடங்கு காரணமாகவும் வெள்ளை வான்களில் இளைஞர்கள் கடத்தப்படுவதன் காரணமாகவும் குடாநாட்டு மக்கள் மரண பீதியில் உறைந்துபோயுள்ளனர்.

மறுபுறம் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் பாரிய தட்டுப்பாடு காரணமாக மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். அன்றாடம் தொழில் செய்து தமது ஜீவனோபாயத்தை நடத்தி வந்தவர்கள் நிர்க்கதி நிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இடத்துக்கிடம் வேறு பட்ட நேரங்களில் ஊரடங்கு தளர்த்தப்படுவதன் காரணமாக கல்விச் செயற்பாடுகள் முற்றாகச் சீர்குலைந்து போயுள்ளன. சமாதான காலத்தில மக்களுக்கு சேவை செய்த உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் மீதான அழுத்தம் காரணமாகவும் பணியாளர்கள் அரச படைகளால் கொலை செய்யப்படுவதன் காரணமாகவும் அந்த நிறுவனங்கள் தமது சேவைகளை மட்டுப்படுத்தியும் வெளியேறியும் செல்கின்றன.

தீவகத்தின் அல்லைப்பிட்டி, மண்கும்பான், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் முப்பதிற்கும் மேற்பட்டோர் தாக்குதல் காரணமாக படுகொலை செய்யப்பட்டும் நூறிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துமுள்ளனர். அத்துடன் இவற்றிற்குச் சாட்சியாக இருந்த அல்லைப்பிட்டி பங்குந்தந்தை ஜிம்பிறவுன் அடிகளாரும் அவரது உதவியாளரும் கடத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தென்மராட்சியில் பல பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பல இளைஞர்களும் காணாமற்போயுள்ளனர். அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது. எனவே சர்வதேசம் இதனை நன்கு உணர்ந்து தமிழ் மக்களுக்கு உதவ முன்வரவேண்டும் - என்று அதில் உள்ளது.

## நெடுந்தீவில் உணவு விநியோகம்

நெடுந்தீவு பல நோ.கூ.சங்க எல்லைப் பரப்பில் 969 குடும்பங்களுக்கு உணவுக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 'உ' அட்டைக்கான பொருள்கள் விநியோகமும் இடம்பெறுவதாகவும் தெரிகின்றது.

மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்கள் சில தினங்களுக்கு முன் போதிய அளவு எடுத்துச்செல்லப்பட்டு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுவதாகவும் நெடுந்தீவு பல நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. டீசல் எடுத்துச்செல்லப்பட்டதைத் தொடர்ந்து எரிபொருள் இன்மையால் தடைப் பட்டிருந்த இ.போ.சவின் உள்ளூர் போக்குவரத்துக்கான பஸ் சேவையும் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. (ப-111)

## ஏழை மக்களின் பிரச்சினைகள் பிரதேச செயலர்கள் மூலம் தீர்க்கப்படும்

### உழைப்பாளர் சங்கத்துக்கு அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம்,செப்.7

இன்றைய அசாதாரண நிலைமைகளால் அன்றாடம் உழைத்து வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் கஷ்டங்கள் தொடர்பாக கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

யுத்த முனைப்பினால் ஏற்பட்டுள்ள இடம்பெயர்வு, ஊரடங்கு உத்தரவு மற்றும் போக்குவரத்தின்மை, வெளித்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளமை போன்ற நிலைமைகள் குடாநாட்டு மக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. அதிலும் அன்றாடம் உழைக்கும் வறிய மக்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாக பாதிப்புக்குள்ளாகி உள்ளது. அன்றன்று உழைத்து வாழும் மக்கள் என்பதால் அன்றாட தொழில் பாதிப்பு. அவர்களை மிக மோசமான துன்பத்திற்கும் வறுமைக்கும் இட்டுச் செல்கின்றது. இந்நிலை தொடருமாயின் அவர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவார்கள். அல்லது அவர்கள் தவறான வழிக்கு தள்ளப்படுவார்கள். எனவே இதுபோன்றதொரு நிலை ஏற்படுவதைத் தடுக்க வேண்டியது அவசியமானதும், அவசரமானதுமான பணியாகும்.

- இவ்வாறு சங்கம் தனது மகஜரில் தெரிவித்துள்ளது.

சில வர்த்தக நிலையங்களிலும் கூட்டுறவு சங்கக்கடைகளிலும் வசதி படைத்தவர்களுக்குச் சலுகை காட்டப்படுவது குறித்தும் சங்கம் அரச அதிபருக்கு எடுத்துக் கூறியுள்ளது.

சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக அவ்வப்பகுதி பிரதேச செயலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## அரச ஊழியர் வாழ்க்கைப்படி; சுற்றறிக்கை யாழ்.வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,செப்.7

2006ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 2006 ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் வாழ்க்கைச் செலவுப் படியாக ஆயிரத்து 375 ரூபா வழங்குமாறு அரசாங்க நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களத் தலைவர்களையும் பணித்துள்ளது.

அரச சேவையிலிருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெற்றுக்கொள்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா அறுநூற்று எண்பத்து ஏழு சதம் 50 ஐயும் 2006 ஜூலை முதலாம் தொடக்கம் வழுங்குமாறு இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாள்சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 46 வீதம் மாதமொன்றுக்கு ஆகக் கூடிய தொகை ரூபா ஆயிரத்து 375 எனும் வரையறைக்கு உட்பட்டு இப்படியைச் செலுத்த வேண்டும் எனவும் -

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு வாழ்க்கைச் செலவுப் படியும் உரித்தாகும் என்ற அடிப்படையில் மீளவும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு கடமையாற்றும் ஓய்வூதியர்களுக்கும் அவர்களது இளைப்பாற்றுச் சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற ரூபா அறுநூற்று எண்பத்தேழு சதம் 50ஐ கழித்து மீதியை மட்டும் செலுத்த வேண்டும் எனவும் -இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் தற்போது சேவையில் உள்ள சகல அரச ஊழியர்களும் மாதமொன்றுக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா ஆயிரத்தை ஏற்கனவே பெற்று வருகிறார்கள். 2006 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இச்சுற்றறிக்கை மூலம் அரச ஊழியர்களுக்கு அதிகரிப்புச் செய்யப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 375 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (1-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்ற அறிவித்தல்

LEADS லீட்ஸ் நிறுவனமானது இல.80, பலாலி வீதி, திருநெல்வேலியில்

இருந்து 11-09-2006 தொடக்கம்

இல.24 ஆசீர்வாதம் வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்

இயங்கவுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்பு இல:-
0773187655
021 222 7923

(53586) -நிர்வாகம்.



## தொழில் வாய்ப்புடன் உயர்கல்வி

Singapore, Malesiya போன்ற நாடுகளில் Computer, Accounting, MBA, MSc கற்கைகள் கற்பதன் மூலம் U.K, Australia போன்ற நாடுகளில் தொழில் பெற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.

* தொழில்வாய்ப்புடன் Hotel Management (சம்பளம் 50,000/-)
* G.C.E. (O/L) சித்தி போதுமானது
* விரைவான பயண ஏற்பாடு

08ஆம், 09ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) காலை 9 - 12 மணி வரை எமது அலுவலகத்தை தொடர்புகொள்ளுங்கள்.

GOLDEN EDUCATION SERVICES
C/O: Spider Games Spot
No.561, கஸ்தூரியார் வீதி (இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம். (53587)


## பாண் உற்பத்திக்கான மாவிநியோகம்

அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட மாவினை அச்சுப் பாண் மட்டும் தயாரிப்பதற்கு பயன்படுத்தவும். றோஸ் பாணோ அன்று வேறுவடிவிலோ பாண் உற்பத்தி செய்வதைத் தவிர்க்கும்படி வேண்டுகின்றோம். முந்திய இருப்பில் பாண் தயாரித்தாலும் கூட 450கிராம் பாண் 28/= ரூபாவுக்கு மேல் விற்கமுடியாது என்பதனையும் கருத்தில் கொள்வும்.

பாண் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் ஒரு பாண் 450 கிராம் ரு.28/- என்பதனை மக்கள் பார்வைக்கு வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக.

64, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (53592)

நிர்வாகம்,
யா.மா.வெ.உ.கூ.ச. (வ-து)

## நினைவஞ்சலி

| 3ஆம் ஆண்டு | | 7ஆம் ஆண்டு |
|---|---|---|
|  | |  |
| அமரர் | | திருமதி |
| மாரிமுத்து இராசரத்தினம் | | இராசரத்தினம் பகவதியம்மா |
| 20.08.1912 | மலர்வு | 28.02.1923 |
| 24.08.2003 | உதிர்வு | 25.08.1999 |
| 20.08.2006 | திதி | 07.09.2006 |

அன்பையும் பண்பையும் ஊட்டி
இன்பமாய் எமை வாழ
வைத்த தெய்வங்களே! (53593)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சேச்லேன்,
சங்கானை.

குடும்பத்தினர்
உரிமையாளர், நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்

## மரண அறிவித்தல்

### திருமதி ஜேந்திரா அன்னலெட்சுமி (ராணி)

இல.40, புறூடி ஒழுங்கை, அரியாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜேந்திரா அன்னலெட்சுமி(ராணி) 05-09-2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு சனிக்கிழமை (09-09-2006) பிற்பகல் 5மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இ.இராஜேந்திரா (சுது).
தொ.பே.:021 3411,
21B, கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (53589)

இ.ஜேந்திரா (கணவர்).
தொ.பே.:0112360235,
46, I.B.C. வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.

## வட்டு - மாவடி முகாம் புதுப்பிக்கப்படுகிறது

சங்கானை,செப்.7

வட்டுக்கோட்டை, மாவடியில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினரின் இராணுவ முகாம் மீண்டும் புதுப்பித்து அரண்படுத்தப்படுகின்றது. முகாமைச் சுற்றியுள்ள காணியில் இருக்கும் பனைமரங்களைத் தறித்து பாதுகாப்பு அரண் அமைப்பதற்கு பாவித்து வருகின்றனர்.

அண்மையில் இம் முகாம் இராணுவம் விலகிச்சென்றிருந்த சமயத்தில் இரண்டு முறை இனந்தெரியாதோரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டு சேதமாக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-29)

## சங்கானைப் பகுதியில் எரிபொருள் அட்டை வழங்கும் ஏற்பாடு

சங்கானை,செப்.7

வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான படிவத்தை பிரதேச செயலகத்தில் வாகனத்திற்குரிய ஆவணங்களைக் காட்டி ரூபா 7/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்றும், அதனை நிரப்பி பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்தால் எரிபொருள் வழங்கும் அட்டையை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-29)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு பாவனைப் பொருள்கள்

அண்மைய யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினரால் உணவுப் பண்டம் அல்லாத பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கே இப்பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## படையினரால் வாகனங்கள் பதிவு

பெற்றோல், டீசல் பாவித்து வாகனங்களைப் பயன்படுத்தும் சகலரும் தமது வாகனங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு சங்கானையில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதையடுத்து வாகனச் சொந்தக்காரர்கள் தமது வாகனப் பதிவை மேற்கொண்டு வருகின்றனர். இதேபோல் வட்டுக்கோட்டைப் பகுதியிலும் பாதுகாப்புப் படையினரும் வாகனப் பதிவுகளை செய்து வருகின்றனர். (ப-29)

## மரண அறிவித்தல்

### கந்தையா கதிர்காமநாதன்

(உரிமையாளர்- நாதன் சைக்கிள் வேக்ஸ்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கதிர்காமநாதன் நேற்று (06.09.2006) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், கமலநாதன் (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி (கனடா), புவனேஸ்வரன் (சிறீசக்தி வர்த்தக நிலையம் -யாழ்) ஆகியோரின் மாமனும், உமாசங்கர் (முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட 4ஆம் வருட மாணவன்), உமாசாயினன் (தரம்-9, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று பி.ப ஒரு மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
து. புவனேஸ்வரன்
(மருமகன்)


## விண்ணப்பப் படிவங்கள்

1. இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை-2006.
2. கிராம உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2006

(வர்த்தகமானியும் பார்வையிடலாம்)

போன்றவற்றிற்கான விண்ணப்பப் படிவங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையில்பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]
கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### சற்குணராசா ருசந்தன்



சற்குணராசா-விமலேஸ்வரி தம்பதியரின் அன்புமகன் ருசந்தன் அகால மரணமாகிவிட்டார். அன்னார் உமாதர்சினி (ஜேர்மனி), யனோசினி (லண் டன்), ஆகியோரின் அன்பு சகோதரனும் யோகலிங்கம், சித்திரா, முருகதாஸ், கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரித்திகா, நிவேதிகா, பிரியசகி, பிறேமிசா, சங்கவி, ஆகியோரின் மாமனும் லக்சிகா, றக்சிகா ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.09.2006) வியாழக்கிழமை பி.ப2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (53599)

தகவல்:
குடும்பத்தினர்.

### S.M. மரியநாயகம்



(முன்னாள் ஆசிரியர், யாழ். நாவாந்துறை R.C, யா/ ஒஸ்மானியா கல்லூரி, யா/பளை மகாவித்தியாலயம், யா/கைதடி விக்னேஸ்வரா M.V, பிரதி அதிபர் - யாழ். நாவற்குழி M.V)

யாழ்ப்பாணம், 12/10, மத்தியூஸ் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட S.M. மரியநாயகம் 05.09.2006 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.மோசேஸ், திருமதி மேரிறோசலின் நல்லம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான எலியாஸ் சிவப்பிரகாசம், திருமதி எலியாஸ் பாக்கியத்தின் மருமகனும், காலஞ்சென்ற திருமதி ஜெட்ரூட் பரிமளத்தின் அன்புக் கணவரும், வினிடா றொசிற்றா (கொலண்ட்), சிராஜ்ஜீன் (கனடா), யஸ்லின் றொஷான் (சுவிஸ்), கிறெசென்சியா றோசினி (செலிங்கோ இன்சூரன்ஸ், மருதானை), றொமியூலா ஷெறீன், கெனத் கிப்பிரியன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோ.தார்சீசியஸ் (முன்னாள் ஆசிரியர்- யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), திருமதி மரியராணி அடைக்கலம் மயில்வாகனம் (முன்னாள் ஆசிரியை-யா/ சென் றோக் R.C), மோ.டயோனீசியஸ் (போதனாசிரியர், கண்டி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமதி சிசிலியா தார்சீசியஸ் (பபா), G.மயில்வாகனம், திருமதி ஹேமாடயோனீசியஸ் ஆகியோரின் மைத்துனரும், றெமிஜியஸ் (கொலண்ட்), யக்குலின்யனா (கனடா), வேல் நிருபராஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் அடக்கச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

62 B, 1/1, கவுடான றோட்,
தெஹிவளை.
தொ.பே: 2735915 (சி-50406)

தகவல்:
மோ.தார்சீசியஸ்
(சகோதரன்)

### திருமதி இரத்தினேஸ்வரி பூபாலசுந்தரம் (கிளி)



மானிப்பாயை பிறப்பிடமாகவும், மணல்தறை ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி பூபாலசுந்தரம் அவர்கள் இந்தியாவில் 05.09.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகையா-இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பூபாலசுந்தரத்தின் (பவான்) அன்பு மனைவியும் , சுபைதா (Royal Bank Canada), ஐங்கரன்(P.H.D. மாணவன் Cambridge University, U.K. ) ஆகியோரின் அன்புத் தாயும் இரவீந்திரன், அனுஜா ஆகியோரின் மாமியும் வைசனி, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரமேஸ்வரி, மகேஸ்வரி(குஞ்சக்கா) காலஞ்சென்றவர்களான Dr.திருஞானசம்பந்தன், சிவலிங்கம் புவனேந்திரன் ஆகியோரின் மைத்துணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று 06.09.2006 புதன் கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம். (53596)

தகவல்
குடும்பத்தினர்.

### சிவராசா சிவசேகர்

(உரிமையாளர்-சுதர்சன் வீடியோ சென்ரர், ஆடியபாதம் வீதி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா சிவசேகர் நேற்று (06.09.2006) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவராசா - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், சிவசங்கர், சிவசுந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் பாற்பண்ணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/8, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (53595)

தகவல்:
சி. சிவசங்கர்
(சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய அரசு அமைக்கும் முயற்சி 'அவுட்'!

# அதற்கான சாத்தியங்கள் இப்போது குறைந்துவிட்டன

கொழும்பு, செப்.7

அரசாங்கமும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து கடந்த சில தினங்களாக பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்டு வந்தபோதிலும், தேசிய அரசாங்கமொன்று அமைவதற்கான சாத்தியங்களே இப்போது இல்லையென்று அரசியல் வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறியவருகிறது.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பு கொண்டிருந்த அக்கறையும், ஆர்வமும் இப்போது அவருக்கு வெகுவாகக் குறைந்திருப்பதே அதற்கான வாய்ப்புகள் அடிபட்டுப் போயிருப்பதற்கான காரணமென்று அரசியல் வட்டாரங்களில் இருந்து மேலும் தெரியவருகின்றது.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு கால்கோள் இடும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரு வாரங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியிடம் அந்த சாரப்பட கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார். இந்தக் கோரிக்கைக்கு கடந்த வார இறுதியில் ஜனாதிபதிக்கு பதில் ஒன்றை அனுப்பியிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில், தற்போதைய நெருக்கடி நிலையில் அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட தமது கட்சி தயாரென்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவரின் கடிதத்துக்கு நேற்று பதில் கடிதமொன்றை அனுப்பியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொது உடன்பாடு ஒன்றின்கீழ் ஐ.தே.கவின் ஆதரவைப் பெறுவது பற்றி ஆராயும் பொறுப்பை தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்திருக்கின்றார் என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றாராம்.

இதன்படி, இரு பிரதான கட்சிகளிடையே பொது உடன்பாடு ஏற்பாடுகள் குறித்து மைத்திரிபால சிறிசேனவே அரசுத்தரப்பில் இனி நடவடிக்கைகளை எடுப்பார் என்பது ஜனாதிபதியின் தீர்மானமாக இருக்கின்றது.

பொது உடன்பாடு ஒன்றின்கீழ் தேசிய விடயங்களைக் கையாளும் விவகாரத்தில் அரச உயர்பீடத்தின் இந்த நழுவல் போக்கு ஐ.தே.க. தலைமையை கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

முக்கியமான விடயம் ஒன்றை அரசுத் தலைவர் தாமே கையாளாமல் இன்னொரு கீழ் மட்டத் தலைவரிடம் ஒப்படைத்திருப்பது இவ் விவகாரத்தில் அரசுத் தலைவரின் அசிரத்தையை காட்டுவதாகக் கருதும் ஐ.தே.க. தலைமை அது குறித்து கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களுக்கு தெளிவுபடுத்துமென்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில்

நேற்றுமுன்தினம் மதத் தலைவர்களையும், சில பிரமுகர்களையும் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமக்கு நாடாளுமன்றத்தில் ஏற்கனவே 126 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதையும், இன்னு பலர் தமது பக்கம் சேரக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், தேசிய அரசு என்ற பெயரில் ரணிலுக்குப் பின்னால் போகவேண்டிய தேவை தமக்கு இல்லை எனவும் அவர்களிடம் கோடி காட்டினார் என அறியவந்தது. (உ-05)

## சட்டவிரோதமாக மாட்டிறைச்சிக் கடை நடத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். சென். பற்றிக்ஸ் வீதியில் சட்டவிரோதமான முறையில் மாட்டிறைச்சிக் கடை நடத்தியவருக்கு யாழ். நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக விதித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட குறிப்பிட்ட கடையை நேற்று இனங்கண்ட யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 15 கிலோ இறைச்சியை கைப்பற்றியதுடன் விற்பனையாளருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா இறைச்சியை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டதுடன், விற்பனையாளரிடம் தண்டப் பணமாக 5 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவு பிறப்பித்தார். (203)

# தீர்வுக்கான சிபாரிசுகள் இவ்வாரம் ஆளுங்கட்சியிடம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, செப்.7

தேசியப் பிரச்சினைக்கான தீர்வு வழிகள் தொடர்பான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின்போது முன்வைக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மத்திய குழுவின் அனுமதி கிடைத்த பின்னர் இந்த அறிக்கைபகிரங்கப் படுத்தப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக அமைச்சர், போராசிரியர் விஸ்வவர்ணபால தலைமையிலான குழுவொன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நியமித்தது. இந்தக்குழு தனது சிபாரிசுகளை அண்மையில் கட்சியின் பொதுச் செயலாளரிடம் கையளித்திருந்தது.

இந்தச் சிபாரிசுகள் கட்சியின் இனப்பிரச்சினைத் தீர்வுக் கொள்கையாக சுதந்திரக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தின்போது அறிவிக்கப்படவிருந்தன. ஆனால் மத்திய குழுவின் அனுமதியைப் பெற்றபின்னர் இதனை பகிரங்கப்படுத்துவதற்கு கட்சித் தலைமை தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# புலிகளுக்கு வெடிமருந்து அனுப்ப முயன்ற சிங்கள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது

கொழும்பு, செப்.7

ஒரு தொகை 'ஜெலிக்னைற்' குச்சிகளை மீன்லொறி ஒன்றில் புலிகள் இயக்கத்திற்கு அனுப்ப முயன்றாரெனக் கூறி சிங்கள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரை நவகமுவ பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

குளிரூட்டப்பட்ட மீன் லொறியொன்றில் 681 'ஜெலிக்னைற்' குச்சிகள் புத்தளத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது நவகமுவ தேவாலயத்திற்கு அருகில் ஆறு சந்தேகநபர்களுடன் பொலிஸார் அவற்றைக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களையடுத்து தெல்கொட பகுதியைச்சேர்ந்த சிங்கள வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார். கடுவெல மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள கல் உடைக்கும் ஆலைகளிலிருந்து கூடுதலான விலைக்கு 'ஜெலிக்னைட்' குச்சிகளை இந்த வர்த்தகர் வாங்கியிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

'ஜெலிக்னைற்' குச்சிகளை கடத்தும் நடவடிக்கையில் இந்த வர்த்தகர் நீண்ட நாட்களாக ஈடுபட்டிருப்பதும் இது தொடர்பில் ஏற்கனவே ஒரு தடவை அவர் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

நவகமுவ பொலிஸார் இது குறித்தான மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-5)

# அத்தியாவசிய பொருள்கள் பதுக்கல் இன்றி மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை தேவை!

## 'எல்லாளன் படை' வற்புறுத்து

யாழ்ப்பாணம், செப்.7

குடாநாட்டின் தற்போதைய நிலைவரத்தை உணர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பதுக்கல் இன்றி பொதுமக்களுக்கு கிடைக்க ஆவண செய்யப்பட வேண்டும் என்று 'எல்லாளன் படை' தெரிவித்துள்ளது.

'எல்லாளன் படை' என்ற பெயரில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்:-

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையிலும் பொது மக்கள் மண் மீட்புக்காக அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இத்தகைய செயற்பாடு தேசத்தின் விடுதலையை விரைவுபடுத்தும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

எனினும், சிலவேதனைக்குரிய விடயங்களும் நாளுக்கு நாள் நடந்தேறுவதை நாம் ஒருபோதும் மன்னிக்கத் தயாரில்லை.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை பதுக்குதல், உயர்ந்த விலைக்கு விற்றல், பொதுமக்களுக்கு அநாவசியமாக தொல்லை கொடுத்தல், கலாசாரச்சீரழிவு, களவு, சமூகத்துரோகச் செயல்களில் ஈடுபடுதல், பொதுமக்களுக்கு சேவைசெய்ய மறுக்கும் - துஷ்பிரயோகம் செய்யும் அரச, அரசசார்பற்ற ஊழியர்களின் செயற்பாடு என்பன குறித்து நாம் அவதானத்துடன் இருக்கின்றோம்.

காலத்தின் தேவைக்கும் தேசத்தின் விடிவிற்கும் குந்தகம் விளைவிக்காமல் இது உங்கள் மண் என்பதை உணர்ந்து செயற்படுமாறு அவசரமாக வேண்டுகின்றோம். இவற்றை மீறு வதும் தேசத்துரோகமாகவே கருதப் படும் - என்று அதில் உள்ளது.

# அவசர நோயாளர் நலன்கருதி அன்புலன்ஸ் சேவைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.7

குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு சென். ஜோண் அம்புலன்ஸ் அமைப்பின் யாழ். கிளை அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்துள்ளது.

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள வேளையிலும் அம்புலன்ஸ் சேவை நடத்தப்படுகின்றது என்று சென். ஜோண் அன்புலன்ஸ் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட் டம் அமுலில் உள்ள நேரங்களில், சத்திர சிகிச்சை கிளினிக், புற்றுநோய் கிளினிக் போன்றவற்றிற்கு அவசரமாகச் செல்பவர்களும் இந்தச் சேவையைப்பெற முடியும் என்றும் -

குறிப்பாகத் தென்மராட்சிப் பிரதேச நோயாளர்களிற்கு முன்னுரிமை கொடுத்தே இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் - சென். ஜோண் அம்புலன்ஸ் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையைப்பெற விரும்பும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென். ஜோண் அம்புலன்ஸ் அலுவலகத்துடன் நேரிலோ அல்லது 021 222 3166 என்ற இலக்கத்துடனோ தொடர்புகொள்ள முடியும் - என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

# புலிகள் மீதான தடைக்கு...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மத்திய அரசு மிகவும் கவனமாக - நிதானமாக காய்நகர்த்துவதை அவதானிக்கலாம் - என்றார்.

கே: இலங்கை மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், மன்மோகன் சிங் அரசின் அணுகுமுறை எப்படியுள்ளது?

ப: இலங்கையில் வசிக்கும் அப்பாவித் தமிழர்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். அவர்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே, தமிழர்கள் மீதான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர புதிய அணுகுமுறையில் அமைந்த ஒரு உறுதியான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

கே: புலிகள் அமைப்பின் மீது தடை இருக்கும்போது இந்தியா தலையிடுவதில் சிக்கல் இருக்கிறதே?

ப: புலிகள் அமைப்புக்கு தடை நீடிப்பதில் அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகியவற்றின் நிலைப்பாடுகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு இந்தியாவும் அந்த வழிகளிலேயே நடக்கக் கூடாது. அவர்களுக்கும், நமக்கும் வித்தியாசம் இருந்தாக வேண்டும். இலங்கையில் மற்றவர்களின் விருப்பங்கள் வேறு, நமது தேவைகள் வேறு.

கே: இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு ராஜீவ் கொலைக்கு முன்; ராஜீவ் கொலைக்கு பின் என்று ஆகியுள்ளதாக தமிழக முதல்வர் கருணாநிதி உட்பட பலரும் கூறுகின்றனரே?

ப: இவ்விடயத்தில் காங்கிரஸ் தான் இரட்டை வேடம் போடுகிறது. ராஜீவ் கொலையில் இதே கருணாநிதி மீது சந்தேகத்தைக் கிளப்பியதும் காங்கிரஸே. இதன் காரணமாகத்தான் குஜ்ரால் தலைமையிலான ஒரு மத்திய அரசையே 1996ஆம் ஆண்டு காங்கிரஸ் கவிழ்த்தது. ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமே தி.மு.கதான் என்று தமிழகத்தில் காங்கிரஸ் பிரசாரமே செய்தது. எந்த தி.மு.க. அமைச்சர்கள் வெளியேற வேண்டுமென்று கோஷம் கொடுத்த காங்கிரஸ், அதே தி.மு.கவின் அமைச்சர்களோடு மத்தியில் ஆட்சி நடத்துகிறது. எனவே, ராஜீவ் கொலைக்கு [illegible] முடியாது.

கே: இலங்கை அரசுக்கு இரண்டு இராணுவ ராடர்களை இந்தியா வழங்கியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. தவிர சிங்கள பொலிஸாருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுகிறதே. அதைப் பற்றி...?

ப: வாஜ்பாய் தலைமையிலான தே.ஜ.கூட்டணி ஆட்சியில் நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது போர்க்கப்பல்கள், கண்காணிப்பு ராடர்கள் உள்ளிட்ட இராணுவத் தளபாடங்கள் தரவேண்டுமென்று இலங்கை கோரிக்கை விடுத்தது. ஆனால், நாங்கள் மறுத்துவிட்டோம். இவ்விடயத்தில் கடுமையான நெருக்கடி எங்களுக்கு வந்தபோதிலும் நாங்கள் உறுதியாக மறுத்துவிட்டதால், இலங்கை அரசு எங்கள் மீது கோபமாகக் கூட இருந்தது. தமிழர்களுக்கு ஆதரவாகத்தான் இந்தியா இருக்க வேண்டுமே தவிர, தமிழர்களைத் துன்புறுத்துபவர்களுக்கு ஆதரவாக இந்தியா இருக்கக்கூடாது.

கே: இலங்கை விடயத்தில் புலிகள் அமைப்பைத் தள்ளி வைத்துவிட்டு ஒரு தீர்வைக்காண இந்தியா விரும்புவது எந்தளவுக்கு பலன் தரும்?

ப: தமிழர்களுக்காகப் போராடும் ஒரு அமைப்பைத் தள்ளிவைத்துவிட்டு எப்படி தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்திவிட முடியும்? எனவே, புலிகள் அமைப்பு இல்லாமல் தீர்வு காண்பதென்பது சரியான முடிவாக இருக்காது.

கே: இலங்கைப் பிரச்சினையில் தமிழகத் தலைவர்களிடம் ஒற்றுமை இல்லையே. உங்களின் பழைய நண்பர்கள் கருணாநிதி, வைகோ போன்றவர்களை ஒருங்கிணைக்க நீங்கள் முயல்வீர்களா?

ப: உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி கிருஷ்ணய்யர் தலைமையில் 1980 மற்றும் 85ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் இலங்கை விவகாரத்தில் ஒன்றுசேர்ந்து பணியாற்றினோம். அதுபோன்ற முயற்சி இப்போதும் தேவை. ஆனால், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் என்னால் இது முடியுமா என்று தெரியவில்லை - என்றார் பெர்னாண்டஸ். (எ)


# அன்பொளி கல்வியகம்

நீராவியடி - யாழ்ப்பாணம்

## வகுப்புகள் ஆரம்பம்

*09.09.2006 சனிக்கிழமை காலை 8 - 9.30 தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சை-2006 மாணவர் களுக்கும் (மீட்டல் வகுப்பு)*

*காலை 10-12.30 தரம் - 4 மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.*

இயக்குநர்


## காணவில்லை



உரும்பிராய் தெற்கு உரும்பிராயைச் சேர்ந்த **வசந்தநாதன் ஜெயதர்சன்** என்பவர் கடந்த 01.09.2006 வெள்ளிக்கிழமை புன்னாலைக் கட்டுவனில் உள்ள பாபு வெதுப்பகத்தில் தனது வேலையை முடித்து காலை 8.10 மணியளவில் வீடு திரும்பியவர் இதுவரை வீடு வந்து சேரவில்லை.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் தொடர்புகொள்ளவும்.

தகவல்:
சிவபாக்கியம் (தாய்).

வசந்தநாதன்
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் படையின் தாக்குதல்களால் புலிகள் பின்வாங்கிச் செல்கின்றனர்

## பிரதமர் ரட்ணசிறி கூறுகிறார்

கொழும்பு, செப்.7

புலிகளின் இலக்குகளை விமானப் படையினர் இனங்கண்டு தாக்குவதால் புலிகள் சம்பூரை அண்டியுள்ள பிரதேசங்களிலிருந்தும் பின்வாங்கிச்செல்கின்றனர் என்று பிர்தமரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் சபையில் பேசும்போது தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

பாதுகாப்புப் படையினர் புலிகளின் தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல்களையே மேற்கொண்டுவருகின்றனர். நாம் யுத்தத்தில் ஈடுபடவில்லை. மேலும் குண்டுத்தாக்குதல்களில் காயமுற்றவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் மருத்துவ சிகிச்சை வழங்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளார்.

புலிகள் சிறுவர்களைக் கடத்தி ஆயுதப் பயிற்சி வழங்குகின்றனர். இதுபோன்று பயிற்சிபெறும் சிறுவர்களை சரணடையும்படி அரசு விடுத்த வேண்டுகோளுக்குச் சாதகமான பலன் கிடைத்துள்ளது. பெருந்தொகையானோர் இராணுவ முகாம்களில் சரணடைந்துவருகின்றனர்-என்றார் பிரதமர் ரட்ணசிறி. (த)

# ஜனாதிபதியின் கடிதத்துக்கு ரணிலின் பதில் விரைவில்!

கொழும்பு, செப்.7

தேசியப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பொது இணக்கப்பாடு ஒன்றின் கீழ் செயற்படுவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்று அனுப்பிய கடிதத்திற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் சில தினங்களில் பதில் அனுப்புவாரென ஐ.தே.க. வட்டாரங்கள் கூறின. ஜனாதிபதி அனுப்பிய கடிதம் குறித்து ஐ.தே.க. தலைவர் நேற்று கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொது இணக்கப்பாடு ஒன்றின் கீழ் செயற்படுவது பற்றிய விடயங்களை ஆராய்வதற்குப் பொறுப்பாக அமைச்சர் ஒருவரை ஜனாதிபதி தம் சார்பில் நியமித்திருப்பது போல், அவ்விடயங்களை ஆராய்வதற்குத் தனது கட்சியின் உறுப்பினர் ஒருவரைத் தாமும் நியமிக்க ஐ.தே.க. தலைவர் தீர்மானித்திருக்கி றார் என மேலும் அறிய முடிகின்றது. (உ-05)

## படுகொலைகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது.

அதேசமயம் சொற்ப நேரத்தில் திருநெல்வேலி தலங்காவல்பிள்ளையார் ஆலயத்திற்கு பின்புறமாக இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் சற்குணராசா ருசந்தன் (வயது 25) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முச்சக்கர வண்டி வைத்திருந்த இவர் அண்மையில் அதனை விற்றுவிட்டார் என்றும் -

நேற்றுக் காலை தமது வீட்டிலிருந்து சமீபமாக உள்ள கடைக்குப் பொருள் வாங்கச் சென்ற சமயம் இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்றும் - இந்தச் சம்பவத்தில் சிக்கி இந்திரா என அழைக்கப்படும் பெண் ஒருவர் தோளில் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணைகளை நடத்திய பின் சடலங்களை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களே இந்தச் சூட்டுச் சம்பவங்களை நிகழ்த்தியதாக ஒரு தகவல் தெரிவித்தது. எனினும் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

## வாழைச்சேனையில்...

வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த நல்லதம்பி பூபாலரத்தினம் (வயது 40) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இனந்தெரியாதோர் அவரை வெளியே அழைத்து சுட்டுக் கொன்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

* * *

வாழைச்சேனை விநாயகபுரத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கனகப்பிள்ளை சத்தியகுமாரன் (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''நோர்வேத் தூதுவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடியிருக்கிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு மற்றும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தற்போது கட்ட விழ்த்து விட்டுள்ள அரச பயங்கர வாதம் மற்றும் வன்முறைகள் பற்றியும் விளக்கினோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக இல்லாதொழிக்கும் முடிவுக்கு அரசு வந்துள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. அண்மையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் எமது மக்கள் மீதான குண்டு வீச்சுக்கள், படுகொலைகள் மற்றும் காணாமல் போதல் தொடர்பாகவும் விரிவாக விளக்கியிருக்கிறோம்.

### சமரச முயற்சிகள் சீர்குலைவு

திருகோணமலையில் சம்பூர்ப் பகுதியை ஊடுருவி ஆக்கிரமித்து இராணுவம் நிற்பது தொடர்பாக எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்தோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இல்லாது செய்யும் இந்நடவடிக்கையினால் எதிர்காலத்தில் சமரச முயற்சிகள் மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் சீர்குலைக்கப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாளில் இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எந்த வரையறையில் இருந்தனவோ அந்த வரையறைக்குள் மீளக் கொண்டு வரப்படாமல் இனிவரும் காலங்களில் எந்த சமரச முயற்சிகளுக்கும் இடமில்லை என்ற எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை நோர்வேக் குழுவினரிடம் முன்வைத்துள்ளோம்.

நோர்வேக் குழுவினரும் தங்களது கவலையையும், கரிசனையையும் தெரிவித்தனர். அரச தரப்பிலிருந்து எதுவித செய்தியும் எமக்குக் கொண்டு வரப்படவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தெளிவாகச் சுட்டடிக்காட்டப்பட்டுள்ளன. யுத்த நிறுத்த மீறல்களுக்கு அப்பால் இந்தக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீறுகின்றபோது ஒரு தரப்பானது யுத்தநிறுத்த ஒப் பந்தத்திலிருந்து முற்றாகவே விலகுவதாகவே அர்த்தம் கொள்ளப்படும்.

### யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசு வெளியேற்றம்

அந்த வகையில் ஸ்ரீலங்கா யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து முழுமையாக வெளியேறி விட்டதாக சம்பூர் நடவடிக்கையின் மூலம் நாங்கள் முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

கண்காணிப்புக் குழுவினரோ, இணைத் தலைமை நாடுகளோ, அனுசரணையாளர்களோ மற்றும் சர்வதேச சமூகமோ இந்த நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். அதனை அவர்களும் விளங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்க முடியாத நிலைக்குப் புலிகளை அரசு தள்ளியிருக்கிறத.

இராணுவ நடவடிக்கைகளையும், குண்டு வீச்சுக்களையும், படுகொலைகளையும், இராணுவ வெறியாட்டங்களையும் எமது தேசத்தில் - எமது மக்களிடத்தில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற நிலையில் புலிகள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

தமிழீழ மக்களின் பலத்தையும், உணர்வையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீண்டிப் பார்த்திருக்கின்றார். அதற்கான விளைவை அவர் சந்திப்பார். எங்கள் மக்களை அழித்து, பெரும் அவலத்தில் தள்ளிக் கொண்டு ஒரு பெரிய வெற்றி விழாவாக மஹிந்த ராஜபக்ஷ கொண்டாடிக் கொண்டிருக்கின்றமை தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் பெரிய அவலத்துக்குள் தள்ளுகிற ஒரு மோசமான காடைத்தனம்.

தமிழ் மக்களை அவலத்துக்குள்ளும், அழிவுக்குள்ளும் தள்ளிவிட்டு இன்று சிங்கள மக்களை மகிழ்ச்சிப்படுத்தி பெரிய வெற்றியைக் கொண்டாடச் செய்கின்ற இந்த நடவடிக்கையானது சிங்கள மக்களுக்கும் இந்த அவல நிலையை மஹிந்த ராஜபக்ஷ வெகு விரைவில் தோற்றுவிக்கப் போகிறார் என்பதைத்தான் எங்களால் உணர முடிகிறது.'' -

என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை பற்றிய விசாரணை இன்னமும் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன என்று இத்தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த அன்று பிக்சர் கூறியிருக்கின்றார்.

இலங்கையர்களான இத்தொண்டு நிறுவன உழியர்கள் 17 பேரையும் இலங்கை அரச துருப்பினரே கொலை செய்தனர் என்று, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முடிவுசெய்துள்ளனர். ஆனால், இலங்கை அரசாங்கம் இதனை மறுத்துள்ளமை தெரிந்ததே. (ஐ - 12)

## அதிரடிப் படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கஞ்சிக்குடிச்சாறு, காஞ்சிரங்குடா, பாவட்டை ஆகிய பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நோக்குடனேயே படைத் தரப்பினர் திருக்கோவில் படை முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் முன்னேறிச்சென்றன என்றும் அவர் தெரிவித்தார்.

5.ஆர்.பி.ஜி. எறிகணைகள் உட்பட பல ஆயுதங்களைப் புலிகள் மீட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். இந்த மோதல் தொடர்பாக அரசாங்கத் தரப்பில் இருந்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஐ-12)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான ஆதரவை சர்வதேச சமூகத்திடம் எதிர்பார்க்கும் இருதரப்பினரும் மனித உரிமைகள் விடயத்தில் தங்களது நேர்மையான செயற்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் - என்று அல்ரன்ஸ் தனது அறிக் கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை -

ஆள்கடத்தல்கள் காணாமற்போதல் மற்றும் படுகொலைகள் சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை அழைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காகவும், விசாரணைகளில் பகிரங்கத் தன்மையை பேணவும், ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஆட்கடத்தல் காணாமற்போதல் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசுமீதும், அரச படைகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், இவை தொடர்பில் முழு அளவில் விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இந்த விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறு முப்படையினர், பொலிஸார் மற்றும் அரச நிறுவனங்கள் ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## குடாநாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணரக்கூடியதாக இருந்தது.

நேற்று காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதை அடுத்து அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்ட பொதுமக்கள் காலை முதல் தொடர்ச்சியாக கேட்ட பல்குழல் தாக்குதல்களால் பதற்றமடைந்தனர்.

பாடசாலைகளுக்கு தயாரான மாணவர்கள், அரச அலுவலகங்களுக்கு கடமை நிமித்தம் செல்லவிருந்த அலுவலர்கள் திடீரென தொடர்ச்சியாக கேட்ட சத்தத்தை அடுத்து பாடசாலை, அலுவலகங்களுக்கு பயணிக்க முடியுமோ என அச்சம் கொண்டனர்.

இதேவேளை - படையினரின் கட்டுப்பாட்டு பகுதியான தென்மராட்சி பகுதியில் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன எனக் கூறப்பட்ட போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

யாழ். நகரப்பகுதிக்கு அத்தியாவசிய பொருள் கொள்வனவிற்காக வந்த மக்களும் பகல் முழுவதும் தொடர்ச்சியாக கேட்ட பல்குழல் சத்தங்களால் பதற்றமடைந்ததுடன் அவசர அவசரமாக தமது தேவைகளை நிறைவு செய்து கொண்டு வீடு திரும்பியதை அவதானிக்கமுடிந்தது.

நேற்று காலை ஆரம்பித்த ஷெல்வீச்சுக்களும், பல்குழல் தாக்குதல்களும் நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்தன எனினும் இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் அறியமுடியவில்லை.

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதலில் புலிகள் மிகவும் பலமிழந்துள்ளனர். புலிகளின் சம்பூர் பகுதியையும் அரசு கைப்பற்றிவிட்டது. இந்த வெற்றியையிட்டு நான் மகிழ்ச்சியடைவதோடு இந்த வெற்றியையீட்ட மிகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட்ட படையினருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலிகளை நாம் பலவீனப்படுத்தி அவர்களைக் காயப்படுத்தியுள்ளோம். இதனால் புலிகள் எம்மீது தொடர்ந்தும் பாயமுயல்வர். ஆனால், நாம் அவதானமாகவே இருக்கின்றோம். புலிகளின் எந்த நடவடிக்கையும் இனி எடுபடாது. அனைத்தையும் முறியடிப்போம்.

நிச்சயம் யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்பதை நாம் அறிவோம். அரசியல் தீர்வு மூலமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அந்த விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருப்போம்.

நிச்சயமாக சமஷ்டி அரசின் தீர்வு மூலமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. ஏதாவது ஒரு வடிவிலான சமஷ்டித் தீர்வு இப்பிரச்சினைக்கு அவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இந்த விடயத்திலும் சரி, எமது நாட்டின் ஏனைய பிரச்சினைகளிலும் சரி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அதிகளவில் தலையிடுவதையும் தேவையில்லாத அறிவுரைகளை எம்மீது திணிப்பதையும் உடனடியாக நிறுத்தவேண்டும்.

அந்த அறிவுரைகளைத் தங்களின் அலுவலக ஊழியர்களுக்கும், இந்தியாவுக்குமே வழங்கவேண்டும். எமது பிரச்சினைகளை நாம் தீர்த்துக்கொள்வோம்.

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்று இவ்வாறாகச் செயற்பட்டார். தேவையில்லாது இலங்கை விடயத்தில் அதிகம் மூக்கை நுழைத்துக் கொண்டார். இப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் டிக்ஸிற்றைப் போலவே செயற்படுகிறார். அதைத்தான் உடனடியாக நிறுத்தவேண்டும் - என்றார். (க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவுள்ளார்.

மன்மோகன் சிங்குடனான சந்திப்பில் தெரிவிக்கப்பட வேண் டிய விடயங்கள் இறுதி செய்யப்பட வில்லை. ஈழத் தமிழர்களுக்கு இந்தியா உதவவேண்டும் என்றுதான விரும்புகிறோம் - என்று மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தான் ஏகப் பிரதிநிதிகள் என்ற முழக்கத்தை முன்வைத்து ஈழத் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த தேசியக் கூட்டமைப்பினருடன் இந்தியப் பிரதமர் பேச்சு நடத்த முன்வந்துள்ளமையானது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாற்ற மாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர் - என்று இணையச் செய்திகள் குறிப்பிட்டன.

இச்சந்திப்பு குறித்து தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடு மாறன் கூறியிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னரை இந்தியப் பிரதமர் சந்தித்துப் பேச்சு நடத்த முடிவு செய்திருந் தால் அது ஒரு நல்ல நடவடிக்கை. ஈழப் பிரச்சனையில் அது ஒரு குறிப்பிடத்தகுந்த விடயமாகும்.

ராஜீவுக்குப் பின்னர் எந்த ஒரு இந்தியப் பிரதமரும் தமிழர் தரப்புத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய தில்லை. இச்சந்திப்பு ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும்.

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி தேவைப்படுகிற போதெல்லாம் இந்தியாவுக்கு வருகிறார். அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வருகிறார். ஏன் ரணில் விக்கிரம சிங்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க கூட அடிக்கடி புதுடில்லிக்கு வருகின்றனர்.

இலங்கை நிலைமைகள் குறித்து நோர்வே தரப்புக்கூட இந்தி யாவிடம் விளக்கம் அளிக்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள மிகப் பெரிய தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியா சந்திக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுக் குத் தடை இருப்பதால் சந்திக்க வில்லை என்று கூறப்படுவதில் உண்மையில்லை. நாகாலாந்து, திரிபுரா மற்றும் ஜம்மு காஸ்மீரிலும் தடை செய்யப்பட்ட இயக்கங்களு டன் இந்திய அரசாங்கம் பேச்சு நடத்தவில்லையா?

விடுதலைப் புலிகளைத்தான் நீங்கள் சந்திக்க விரும்பவில்லை எனில் சரி... ஈழத் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏன் தவிர்க்கிறீர்கள்? என்று தெரிவித்திருக் கிறார் பழ. நெடுமாறன்.(ஐ - 12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org